## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

## O.S.No. 77 of 2024

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. கண்ணியப்பன் |
| தந்தை பெயர் | : | திரு. தெய்வசிகாமணி |
| வா.த.சா | : | 1 |

1969ம் ஆண்டு 14வது சட்டத்தின் படி 12வது பிரிவின் கீழ் 13.10.2025 அன்று **திரு. M. ராஜகுமரேசன், B.Com., L.L.B.,** முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, கடலூர் அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

வா.த.சா. 1 அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

<u>பிரதிவாதித் தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

எனது தகப்பனார் பெயர் தெய்வ சிகாமணி ஆகும். அவரது முதல் மனைவி ஜணகா ஆவார். அவர்கள் இருவருக்கும் திருமணத்தின் பயனாக பிரதிவாதிகள் 1முதல் 3 பிறந்தார்கள். ஜணகா இறந்துவிட்டார். அவர் இறந்தபிறகுதான் தெய்வ சிகாமணி எனது தாயார் வீரம்மாளை திருமணம் செய்துகொண்டார். அவர்களுக்கு நான்கு பிள்ளைகள். கண்ணியப்பன், சந்திரா, கோபால்சாமி மற்றும் பாலகிருஷ்ணன் ஆவார்கள்.

2. சந்திரா தற்போது இறந்துவிட்டார். அவருக்கு பிரதிவாதிகள் 4 முதல் 7 பிள்ளைகள் ஆவார்கள். கோபால்சாமி தற்போது உயிருடன் இல்லை. அவருக்கு கார்த்திகேயன், தேவி என இரண்டு பிள்ளைகள். கோபால்சாமி மனைவி இறந்துவிட்டார். எனது தாயார் வீரம்மாள் தற்போது இறந்துவிட்டார். அதன் பிறகு எனது தகப்பனார் தெய்வசிகாமணி இறந்துவிட்டார். எனது தந்தையின் தாயார் பெயர் காத்தாயி ஆகும். அவரும் தற்போது இறந்துவிட்டார்.

3. எனது தந்தைக்கு வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் 1 முதல் 9 மட்டுமே வாரிசுகள் ஆவார்கள். வேறு வாரிசுகள் கிடையாது.